தினமணி

விவசாயிகளுக்கு மானியத்தில் உரம் வழங்கல்

First Published : 22 Jul 2012 09:22:37 AM IST

உசிலம்பட்டி, ஜூலை 21: மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே உள்ள செல்லம்பட்டி ஊராட்சியில், தமிழ்நாடு அரசு தோட்டக்கலை திட்டத்தின் கீழ், மானியத்தில் விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு, ஊராட்சி ஒன்றியத் தலைவர் பவளக்கொடி ராசுக்காளை தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் மோகன்குமார் வரவேற்றார்.

தோட்டக்கலை அலுவலர் மணிவேல், வேளாண்மை உதவி இயக்குநர் விஜயலட்சுமி, துணைத் தலைவர் ஜெயராமன், கவுன்சிலர் தேவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செல்லம்பட்டி வட்டாரத்தில் உள்ள கண்ணனூர், முதலைக்குளம், பூதிப்புரம், கோவிளாங்குளம், வடுகபட்டி, கொடிக்குளம் மற்றும் விக்கிரமங்கலம் ஆகிய கிராமங்களில் சம்பங்கி, மல்லிகைப் பூ, கோழிக்கொண்டை பூ மற்றும் மா, நெல்லி உள்ளிட்ட பணப்பயிர் விவசாயம் செய்துள்ள விவசாயிகளுக்கு விதை மற்றும் உழவு செய்ய வங்கிக் கணக்கு மூலமாக பணமும், மானியத்தில் உரங்களும் வழங்கப்பட்டன.

கால்நடைகள் மூலமும் விவசாயிகள் அதிக வருவாய் ஈட்டலாம்: ஆட்சியர்

First Published : 22 Jul 2012 09:30:02 AM IST

ராமநாதபுரம், ஜூலை 21: விவசாயிகள் கால்நடைகளை முறையாகப் பராமரித்து அதன் மூலமும் அதிகமான வருவாய் ஈட்டலாம் என ராமநாதபுரம் ஆட்சியர் க.நந்தகுமார் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தின் போது பேசினார்.

ஆட்சியர் அலுவலக ஊராட்சி மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்து மேலும் பேசியதாவது: இஸ்ரேல் நாட்டில் 10 நபர்கள் 400 மாடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். நமது மாவட்டமான ரெகுநாதபுரத்தில் கூட ஒரு நபர் 10 மாடுகளை வைத்து நல்லமுறையில் பராமரித்து வருகிறார்.

விவசாயிகள் அவரது இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு அவரைப் போலவே நீங்களும் நல்லமுறையில் கால்நடைகளைப் பராமரித்து அதிக லாபம் ஈட்ட முடியும். விவசாய சாகுபடி பருவம் தொடங்குவதற்கு முன்பாகவே விவசாயத்திற்குத் தேவையான உரங்களை அதிகாரிகள் போதுமான அளவு இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.
மிளகாய் பயிர் உற்பத்தியை பெருக்கும் வகையில் சாகுபடி பரப்பு மற்றும் சாகுபடியை அதிகரிக்கவும் அதிகாரிகள் கவனம் செலுத்திட வேண்டும்.

நெல்விதை விதைக்கும் கருவி மூலம் விதைப்பதால் வரிசையாக விதைக்க முடியும். சரியான அளவில் பயிர் எண்ணிக்கையும் பராமரிக்கப்படும். இடைவெளியில் இயந்திரங்களைக் கொண்டும் களை எடுக்கலாம்.
உரமிடுதல் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பதும் எளிது. பயிர்களுக்கு சூரிய வெளிச்சமும், காற்றோட்டமும் கிடைப்பதால் பயிர் நன்கு வளரும்.
விவசாயிகள் தங்களது வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள அலுவலர்களைத் தொடர்பு கொண்டு நெல் விதைப்புக் கருவி மூலம் விதைப்பு செய்ய முன்பதிவு செய்யலாம் எனவும் ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக 40 பேர் கொண்ட விவசாயிகள் குழு இஸ்ரேல் நாட்டிற்கு சென்று அங்கு மேற்கொள்ளப்படும் வேளாண்மைப் பணிகள் குறித்து பார்வையிட்ட வந்த விவரங்களான பயிர்களுக்கு அந்த நாட்டில் உரமிடும் முறை, நீர்ப் பாசனமுறை போன்றவற்றையும் விளக்கினார்கள்.

இக்கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர்(பொறுப்பு)சுகுமாறன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சக்திமோகன், கூட்டுறவு வங்கி தனி அலுவலர் செல்வக்குமரன் ஆகியோர் உள்பட விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் நீர்மட்டம் 36.53 அடி

First Published : 22 Jul 2012 10:09:38 AM IST

ஈரோடு, ஜூலை 21: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 36.53 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி.

அணைக்கு விநாடிக்கு 441 கன அடி நீர் வரத்து இருந்தது. அணையில் நீர்இருப்பு 1.95 டி.எம்.சி.

சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு
First Published : 22 Jul 2012 05:22:49 AM IST

சென்னை, ஜூலை 21: தமிழகம், புதுவையின் ஒரு சில இடங்களில் ஞாயிற்றுக்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஞாயிற்றுக்கிழமை சென்னையின் வெப்பநிலை 93 டிகிரியாக இருக்கும்.

சனிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை நிலவரம் (சென்டி மீட்டரில்):

கோவை மாவட்டம் வால்பாறை - 2, நீலகிரி மாவட்டம் தேவாலா, நடுவட்டம் - 1.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**அரிசி ஏற்றுமதிக்கு தடை இல்லை: மத்திய அரசு**

ஜூலை 23,2012,00:35



புதுடில்லி:பருவமழை குறைந்துள்ளதை வைத்து, அரிசி, கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று மத்திய வேளாண் துறை செயலர் ஆசிஷ் பகுகுணா தெரிவித்தார்.கையிருப்பு:போதுமான அளவிற்கு உணவு தானியங்கள் கையிருப்பு உள்ளதால், ஏற்றுமதிக்கு தடை விதிக்க தேவையில்லை.

சர்வதேச சந்தையில் இந்தியா நிலையான இடத்தை பிடிக்க வேண்டுமென்றால், ஏற்றுமதி தொடர வேண்டியது அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.கடந்த ஆண்டு, உணவு தானிய உற்பத்தி, சாதனை அளவாக 25.74 கோடி டன்னை எட்டியது. இதில், நெல் உற்பத்தி 10.43 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி 9.39 கோடி டன்னாகவும் இருந்தது.கோதுமை :இதையடுத்து, சென்ற ஆண்டு செப்டம்பரில், மத்திய அரசு, கோதுமை மற்றும் சாதாரண அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியது. அது முதல், தற்போது வரை, 50 லட்சம் டன் சாதாரண அரிசியும், 15 லட்சம் டன் கோதுமையும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.அண்மையில், கிடங்கு பற்றாக்குறையால், மேலும் 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியது. மேலும் பால் பவுடர் உள்ளிட்ட பால் பொருட்களின் ஏற்றுமதிக்கும் அனுமதி வழங்கப்பட்டது. நடப்பு 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்.,-செப்.,) 35 லட்சம் டன் சர்க்கரை, 1.50 கோடி பருத்தி பொதிகள் ஏற்றுமதியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
பருவமழை:இந்நிலையில், நடப்பாண்டு இதுவரை 22 சதவீத அளவிற்கு பருவமழை குறைந்துவிட்டது. இதனால், உணவு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளது. உணவு தானியங்கள் விளைச்சல் குறையும் என்று தெரிகிறது. இதன் தாக்கம் அடுத்த ஆண்டு எதிரொலிக்கும் என்பதால், நெல், கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும் என குரலெழுந்துள்ளது.

**தேயிலையில் கூடுதல் வருவாய்**

ஜூலை 23,2012,00:32



xகுன்னூர்:குன்னூர் தேயிலை வர்த்தகத்தில், கடந்த ஆறு மாதங்களில் மட்டும், சென்ற ஆண்டு இதே காலத்தை விட, கூடுதலாக, 31.09 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.
குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கம் சார்பில், வாரந்தோறும் தேயிலைத் தூள் ஏலம்

நடத்தப்படுகிறது. இதில், உள்நாடு மற்றும் பாகிஸ்தான், ரஷ்யா போன்ற வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்பது வழக்கம். நடப்பாண்டு ஜூன் வரையில் நடைபெற்ற 26 ஏலங்களில், 2.49 கோடி கிலோ தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டது. சராசரியாக ஒரு கிலோ 77.41 ரூபாய் வீதம் 192.75 கோடி ரூபாய்க்கு தேயிலைத் தூள் விற்பனையானது.கடந்தாண்டு, இதே காலத்தில் 2.47 கோடி கிலோ தேயிலைத் தூள், சராசரியாக கிலோ 65.45 ரூபாய் வீதம், விற்பனை செய்யப்பட்டு 161.66 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. இதனால், கணக்கீட்டு காலத்தில், 31.09 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

## நெற்கதிர்கள் தண்ணீரில் மூழ்குவதால் விவசாயிகள் பரிதவிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2012,23:04 IST

கருத்தை பதிவு செய்ய

வாலாஜாபாத் : அரசு அறுவடை இயந்திரங்களை, வாடகைக்கு எடுப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் மற்றும் கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக, விளைந்த நெற்கதிர்கள், மழை நீர் தேங்கியுள்ள வயல்களில் மூழ்கி கிடக்கின்றன. இதனால், கதிரிலேயே நெல் முளைத்து, நஷ்டம் ஏற்படும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர்.

மாவட்டத்தில், சொர்ணவாரி பட்டத்தில், 12 ஆயிரம் ஹெக்டேரில் நெல், 210 ஹெக்டேரில் சிறு தானியம், 240 ஹெக்டேரில் எண்ணெய் பயிர்கள், தற்போது, அறுவடைக்கு தயாராக உள்ளன. இந்த நிலையில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள, வயல்களில் மழை நீர் தேங்கி உள்ளது. அறுவடை தாமதமாவதால், நெற்கதிர்கள் மழை நீரில்
சாய்ந்து உள்ளன.

கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக, கடந்த சில ஆண்டுகளாவே, வேளாண் துறையின் அறுவடை இயந்திரங்களை வாடகைக்கு எடுத்து தான் அறுவடை நடக்கிறது. எதிர்பாராத மழை காரணமாக, வேகமாக அறுவடையை முடிக்க, வேளாண் துறையின் அறுவை இயந்திரங்களை விவசாயிகள் நாடுகின்றனர். ஆனால், அறுவடை இயந்திரங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

காரணம் என்ன?

சென்னையில் உள்ள, வேளாண்மை தலைமை பொறியியல் அலுவலகத்தில் இருந்து தான், அறுவடை இயந்திரங்களை வாடகைக்கு எடுக்க வேண்டும். தற்போது, அங்கு, இரண்டு அறுவடை இயந்திரங்கள் மட்டுமே உள்ளன. அவை இரண்டும் பழுதடைந்து உள்ளன. நெற்கதிர்கள், நீண்ட நாட்கள் நீரில் மிதந்தால், அவை முளைவிட்டு விடும் என்ற அச்சத்தில்,

விவசாயிகள் தனியார் அறுவடை இயந்திரங்களை நாடி செல்கின்றனர்.
இதை பயன்படுத்தி, உரிமையாளர்கள் அதிக வாடகை வசூலித்து வருகின்றனர்.

கோரிக்கை

வள்ளுவப்பாக்கத்தை சேர்ந்த, விவசாயி, சிவா கூறும் போது, ""அரசு அறுவடை இயந்திரத்தை அழைத்தால், பழுதடைந்து உள்ளது என்கின்றனர். தனியார் அறுவடை இயந்திரங்களை வைத்திருப்போர் அதிக பணம் கேட்கின்றனர்.
இதை தவிர்க்க, வேளாண் பொறியியல் துறையில் உள்ள அறுவடை இயந்திரங்களை சரி செய்ய, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.
இதுவே மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பு விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.
இது குறித்து, வேளாண்மை பொறியியல் துறையின், அதிகாரி ஒருவர் கூறும்போது, ""பழுதான அறுவை இயந்திரங்களை உடனடியாக சரி செய்ய ஏற்பாடு செய்யப் பட்டு உள்ளது.
அலைபேசி மூலம் கூறினால், அறுவடை இயந்திரத்தை அனுப்பி வைக்க இயலாது.
அறுவடை இயந்திரம் தேவைப்படுவோர், சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில், முறையாக பதிவு செய்ய வேண்டும், அதன் பின்னரே அறுவடைக்கு இயந்திரத்தை அனுப்ப முடியும்," என்றார்.

அறுவடை நேரத்தில்...

விவசாயிகளுக்கு எளிதில் அறுவை இயந்திரங்கள் கிடைக்க வசதியாக, முதல்வர் ஜெயலலிதா, அலைபேசி மூலமே அறுவை இயந்திரங்களை முன்பதிவு செய்யும் முன்னோடி திட்டத்தை அறிவித்து இருந்தார்.
ஆனால், இங்கோ, அறுவடை நேரம் என, தெரிந்திருந்தும், வேளான் பொறியியல் துறை தூங்கிக்கொண்டு இருக்கிறது.
அதற்கும் மேலாக, இந்த அவசர சூழலில், விவசாயிகள் பதிவு செய்ய வேண்டும், என்று குறிப்பிடுவது, விவசாயிகளுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தும்.
இது குறித்து, வேளான் துறை உயர் அதிகாரிகள், உடனடியாக நடவடிக்கை எடுத்தால், விவசாயிகள் நஷ்டத்தில் இருந்து காக்கப் படுவர்.
வாடகை விபரம்
நெல் அறுவடை அரசு தனியார்
இயந்திரம் வகை (ரூபாயில்) (ரூபாயில்)
நீரில் மிதக்கும் இயந்திரம்(பெல்ட்) 1,215 2,200
சாதாரண இயந்திரம் 1,200 2,000

## கரும்பு அலுவலகம் வளவனூரில் திறப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,03:07 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம்:வளவனூரில் அரியூர் பாரி சர்க்கரை ஆலையின் புதிய கோட்ட அலுவலகம் திறப்பு விழா நடந்தது.விழுப்புரம் அடுத்த வளவனூர் மெயின் ரோட்டில், அரியூர் ஈ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலை சார்பில் புதிய கரும்பு கோட்ட அலுவலகம் திறப்பு விழா நடந்தது.ஆலை பொது மேலாளர் ராமசுப்ரமணியன் அலுவலகத்தை திறந்து வைத்தார். கரும்புத் துறை அலுவலர் கனகரத்னம் முன்னிலை வகித்தார். கரும்பு விவசாயிகளுக்கு ஈ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலையின் சேவைகள் பற்றியும், சிறப்பு பட்ட கரும்பு நடவு செய்வதன் நன்மைகள் குறித்தும், கரும்பு மேலாளர் இளங்கோவன் விளக்கமளித்தார்.விவசாய சங்கத் தலைவர் ராமதாஸ், செயலாளர் நடராஜன், வி.பூதூர் ஊராட்சி தலைவர் பூங்குன்றம் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். பயிற்சி அலுவலர் குணசேகரன், கோட்ட அலுவலர் சரவணன் நன்றி கூறினர்.

## துவரை மகசூல் அதிகரிக்க மாற்று முறை சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,00:00 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: பாலக்கோடு தாலுகா முனியப்பன் கோவில் கொட்டாய் பகுதியில், துவரையில் மாற்று முறை சாகுபடி குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர்.

கோவை வேளாண் பல்கலையில், இளங்கலை வேளாண்மை பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண்மை அனுபவ திட்டத்தின் கீழ் பாலக்கோடு தாலுகா பகுதியில் தங்கிருந்து பல்வேறு களப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாலக்கோடு அடுத்த முனியப்பன் கோவில் கொட்டாய் கிராமத்தில், துவரை நடவு முறை தொழில் நுட்பம் குறித்து விளக்கினர். அட்மா திட்டதின் கீழ் அமைக்கப்பட்டிருந்த துவரை பாலித்தீன் பை நாற்றங்கால் நடவு நடந்தது.

நடவு முறை துவரை சாகுபடியால் ஏற்படும் நன்மைகள், பருவமழை தாமதமானலும், அதற்கேற்றவாறு குறுடத்த பருவத்தில் நடவு செய்ய இயலும். நடவு வயிலில் பயிரின் காலம், 25 முதல் 35 நாட்கள் குறைக்கப்படுகிறது. அதிக ஆழத்தில் நடவு செய்யப்படுவதால், வேர் வளர்ச்சி அதிகரித்து, பயிர் வறட்சியை தாங்கி வளரும்.

வரிசை நடவு முறை செய்தல், பயிர் பாதுகாப்பு முறைகள், நடவு செய்த 20 முதல் 30 நாட்களில், ஐந்து முதல் ஆறு செ.மீ., அளவுக்கு நுனிக்குறுத்து கிள்ளி விடுதல், பக்க கிளைகளை அதிகரித்து

விளைச்சல் கூடுகிறது, என்பது குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர்.

பூப்பிடிக்க துவங்கியதும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பயறு ஒண்டர் தெளிப்பதால், பூ உதிர்வது தடுக்கப்படுவதோடு, காய்களின் எண்ணிக்கை கூடுகிறது. நேரடி விதைப்பின் மூலம் கிடைக்கும் மகசூலை விட இந்த முறையில், 30 சதவீதம் அதிக மகசூல் கிடைக்கும், என மாணவர்கள் தெரிவித்தனர்.

வேளாண்துறை அட்மா திட்ட அலுவலர்கள் தேவி, கலையரசி, கோபிநாத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வாழை சீஸன் நிறைவு: கதளி விலை உயர்வு

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,02:03 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: வாழை அறுவடை சீஸன் நிறைவால் கதளி விலை கிலோ நான்கு ரூபாய் உயர்ந்துள்ளதால் வாழை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோபி வட்டாரத்தில், வேட்டைக்காரன் கோவில், பங்களாப்புதூர், கள்ளிபட்டி, டி.என்.பாளையம், கோபி, கொளப்பலூர், கூகலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 15 ஆயிரம் ஏக்கரில் கதளி, நேந்திரம், ரோபஸ்ட்ரா, ரஸ்தாளி, மொந்தன், பச்சைவாழை, பூவன், தேன் வாழை ஆகிய வாழை ரகங்கள் பயிராகின்றன. சென்றாண்டுக்கான அறுவடை சீஸன் நிறைவு பெற்றுள்ளது.

கோபி வேளாண் விற்பனை சங்கத்துக்கு, 7,000 முதல், 8,000 வரை வரத்தான வாழைத்தார், தற்போது, 3,000 முதல் 3,500 தாராக குறைந்துள்ளது. வாழை வரத்து குறைந்ததன் காரணமாக, விலை அதிகரித்துள்ளது. கதளி கிலோ, 40 ரூபாய், நேந்திரம், 35 ரூபாய், ரஸ்தாளி ஒரு தார், 375 ரூபாய், செவ்வாழை, 630 ரூபாய், ரோபஸ்ட்ரா, 370 ரூபாய், மொத்தன், 325 ரூபாய், பச்சைநாடன், 220 ரூபாய், பூவன், 400 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சென்ற வாரத்தை காட்டிலும் நடப்பு வாரம் கதளி கிலோவுக்கு நான்கு ரூபாய் உயர்ந்துள்ளது.

விவசாயிகள் கூறியதாவது:

சென்றாண்டில் கதளி, ரஸ்தாளி போன்றவை கிலோ, 25 முதல் 30 ரூபாய் வரை விற்கப்பட்டது. நடப்பாண்டு விலை அதிகரித்துள்ளது. சென்ற வாரம், 36 ரூபாய்க்கு விற்கப்பட்ட கதளி, 40 ரூபாயாகவும், 560 ரூபாய்க்கு விற்கப்பட்ட செவ்வாழை ஒரு தார், 630 ரூபாயாகவும், 315 ரூபாய்க்கு விற்கப்பட்ட ரொபஸ்டிரா, 370 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது.

மஞ்சள் விலை வீழ்ச்சி, கரும்பு வெட்டுக் கூலி உயர்வு போன்ற பிரச்னையால் வாழை அதிகளவில் பயிரிட்டோம். சில வாரங்களுக்கு முன் வாழை அறுவடை நேரத்தில் விலை வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். நடப்பு வாரத்தில் மட்டும் கதளி கிலோவுக்கு நான்கு ரூபாய்

உயர்ந்துள்ளது. கேரளாவில் ஓணம் பண்டிகை நெருங்குவதால் கதளி விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கிறோம்.

### ஏலக்காய் விளைச்சலில் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,01:24 IST

கருத்தை பதிவு செய்ய

கூடலூர் : "கூடலூரில் ஏலக்காய் விளைச்சலை அதிகரிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என சிறு விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.கூடலூரில் ஏலக்காய் உற்பத்திக்கான மழை, அதற்கான காலநிலை அமைந்துள்ளதால் நல்ல விளைச்சல் கிடைக்கிறது. சில தனியார் எஸ்டேட்டுகளும், சிறு விவசாயிகளும் ஏலக்காய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 560 ஏலக்காய் செடிகள் நடவு செய்யப்படுகிறது. நடவு செய்யப்பட்ட ஏலச் செடிகளை முறையாக பராமரித்தால் மூன்று ஆண்டுகளிலிருந்தே ஏலக்காய் கிடைக்கிறது.ஆண்டுக்கு ஒரு முறை பலன் தரும் ஏலச்செடியில் மார்ச் மாதம் பூ பூக்க துவங்கி, ஜூன் முடிய பூக்கும். பூ பூத்ததிலிருந்து 140 நாட்களில் ஏலக்காய் பறிக்க துவங்கி விடுவர். பறிக்கப்பட்ட ஏலக்காய்களை பதப்படுத்தும் நிலையத்துக்கு எடுத்து சென்று மின்சாரம் மற்றும் விறகு அடுப்பு மூலம் உலர்த்தி, பதப்படுத்தி பின்னர் விற்பனை செய்யப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட ஏலக்காய் 8 மி.மீ., அளவு இருந்தால், அவை முதல் தரம் என்றும், 7, 6 மி.மீ., அள வுள்ள ஏலக்காய் முறையே இரண்டு, மூன்றாம் தரமாக பிரிக்கப்படுகிறது.கூடலூர் பகுதியில் ஏலக்காய் தனியாக பயிரிடாமல், கிராம்பு, குருமிளகு, பாக்கு, தென்னை போன்ற விவசாய பயிர்களுக்கு இடையே ஊடு பயிராவும் பயிரிட்டு வருகின்றனர். எனவே,"ஏலக்காய் விளைச்சலை அதிகாரிக்க செய்ய,அரசு மானியம் வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்,' என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

### மிக நீண்ட இலை பருத்தி சாகுபடியால் அதிக லாபம்: கலெக்டர் "அட்வைஸ்'

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,00:32 IST

பெரம்பலூர்: ""மிக நீண்ட இலை பருத்தி சாகுபடி செய்தால் விவசாயிகள் அதிக லாபம் அடையலாம்,'' என்று பெரம்பலூர் கலெக்டர் பேசினார்.

மிக நீண்ட இலை பருத்தி மற்றும் மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கம் வேப்பந்தட்டை பருத்திஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது. இக்கருத்தரங்கில் கோயம்புத்தூர்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று, மிக நீண்ட இலை பருத்தி மற்றும் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் முறைபற்றி விவசாயிகளுக்கு விளக்கினர். கருத்தரங்கில் கலெக்டர் தரேஷ்அஹமது பேசியதாவது:
இந்திய அளவில் மிக நீண்ட இலை பருத்தி 15 லட்சம் பேல் தேவைப்படுகிறது. தற்போது ஐந்து லட்சம் பேல் தான் மகசூல் செய்யப்படுகிறது. மிக நீண்ட இலை பருத்தியின் தேவை சந்தை அளவில் அதிக அளவு தேவை இருப்பதால், விவசாயிகள் மிக நீண்ட இலை பருத்தி சாகுபடி செய்தால் அதிக லாபம் அடையலாம்.
தேவைக்கேற்ப மிக நீண்ட இலை பருத்தியை உற்பத்தி செய்தால் பருத்தி தொழிற்சாலையே நேரடியாக வந்து கொள்முதல் செய்வார்கள். இதன் மூலம் உங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 12 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் முக்கிய பங்கினை வகிக்கின்றன. மாவட்டத்தில் மொத்தம் உள்ள விவசாயிகளில் பெரும்பாலான விவசாயிகள் பருத்தி மற்றும் மக்காச்சோளம் பயிரினை பயிரிட்டு வருகின்றனர். இந்த பயிர்களின் மூலம் தற்போது விவசாயிகளுக்கு கிடைத்து வரும் வருமானத்தினை பெருக்கவும், புதிய தொழில்நுட்ப உத்திகள் குறித்தும், உயர் விளைச்சல் தரவல்ல புதிய பயிர் ரகங்கள் குறித்து விளக்கம் அளிக்க வந்துள்ள கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் விவசாயிகளுக்கு தரும் கருத்தினை பெற்று பயனடையுமாறு கேட்டுகொள்கிறேன்.
இவ்வாறு கலெக்டர் பேசினார்.
கருத்தரங்கில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை ஆராய்ச்சியாளர்கள் குணசேகரன், கணேசன், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் கவிமணி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் பன்னீர்செல்வம், தோட்டக்கலை துணை இயக்குனர் சௌந்திரராஜன் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகள் கவனத்திற்கு

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2012,22:30 IST

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் விவசாயிகளுக்கு நெல் விதை சான்று பெற்ற தரமான விதைகள் மான்யத்தில் சப்ளை செய்யப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.
ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் சான்று பெற்ற தரமான நெல் விதைகள் மான்யத்தில் வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் வேளா ண்மை விரிவாக்க மையத்தில் சப்ளை செய்வதற்காக ஏடிபி 45 சான்று விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான நெல் விதையினை மானியத்தில் பெற்று கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### விவசாயி மீது தாக்குதல்

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2012,22:09 IST

கூடலூர் : கூடலூரைச் சேர்ந்தவர் நாகேந்திரன்,43. இவர் கழுதைமேடு தொட்டினார் புலத்தில் விவசாயம் செய்து வருகிறார்.
நேற்று முன்தினம் மாலையில் இவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, ஒரு கும்பல் இவரை அரிவாள் மற்றும் கடப்பாறையால் தாக்கிவிட்டு தப்பியோடியது. இதில் பலத்த காயமடைந்த இவர் மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார். இவர் கொடுத்த புகாரின் பேரில், கூடலூரைச் சேர்ந்த சிவராமன் உட்பட 14 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து தேடி வருகின்றனர்.

### காய்கறி பயிரிட விவசாயிகளிடம் ஆர்வம் குறைகிறது

பதிவு செய்த நாள் : ஜூலை 22,2012,22:15 IST

சிவகங்கை : வறண்ட கிணறுகள், உர விலை உயர்வால் மாவட்டத்தில் காய்கறிகளின் விளைச்சல் குறைந்து விட்டன. இங்குள்ள மார்க்கெட்களை வெளிமாவட்ட காய்கறிகள் ஆக்கிரமித்துள்ளதால், விலையும் அதிகரித்துவிட்டது.
மாவட்டத்தில்,சிவகங்கை அருகே சாலூர், இடையமேலூர்,மலம்பட்டி, இளையான்குடி, திருப்புவனம் அருகே மாரநாடு,கொந்தகை, அரியக்குடி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள், கத்தரி,வெண்டை,பச்சை மிளகாய்,தக்காளி, கருணை,கீரை உள்ளிட்டவற்றை நடவு செய்து வந்தனர்.
முற்றிலும் கிணற்று பாசனத்தின் மூலமே விளைந்த காய்கறிகளை உழவர்சந்தை,காய்கறி மார்க்கெட்டில் விற்பனை செய்து வந்தனர். நாள் ஒன்றுக்கு, 20 டன்னுக்கும் மேலாக காய்கறி வரத்து இருந்தது.
வரத்து குறைவு: தற்போது, உரம் விலை உயர்வு, வறண்ட கிணறுகளால் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.
குறிப்பாக,தேசிய வேலை உறுதி திட்ட பணிகளில் அதிக சம்பளம் தருவதால், விவசாய

பணிகளுக்கு ஆட்கள் இன்றி விவசாயிகள் தவிக்கின்றனர். பெரும்பாலான விவசாயிகள் தங்களது குடும்பத்தினர் மட்டுமே வேலை செய்யும் அளவிற்கு காய்கறி நடவு செய்யும் நில அளவை குறைத்து விட்டனர்.
இதன் காரணமாக மாவட்டத்தில், காய்கறிகளின் விளைச்சல் நாளொன்றுக்கு 10டன்னுக்கும் குறைவாகவே உள்ளது. வியாபாரிகள் வெளிமாவட்டங்களில் இருந்து காய்கறிகளை வாங்கி வருவதால் விலை உயர்ந்து கொண்டே வருகிறது.
சாலூர் விவசாயி போஸ் கூறியதாவது: இப்பகுதியில் அதிகளவு காய்கறிகள் நடவு செய்தோம். கிணற்று நீர் வற்றிவிட்டது. குறிப்பாக, விவசாய வேலைக்கு காலை 6 மணி முதல் பகல் 2 மணி வரை வேலைபார்த்தால் ரூ.80 முதல் 100 வரை சம்பளம் தருகிறோம். ஆனால், வேலை உறுதி திட்டத்தில் கண்மாய் தூர்வாரும் பணிக்கு செல்பவர்கள் வேலையே செய்யாமல் ரூ.132 வரை வாங்கி வருகின்றனர்.இதனால், விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. இதன் காரணமாக காய்கறி பயிரிடுவதை குறைத்து வருகிறோம், என்றார்.

## விளைச்சலோ அதிகம் விலையோ குறைவு

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,00:49 IST

ஆறுமுகநேரி : ஆறுமுகநேரியில் புளி விலை குறைந்ததால் வீதி வீதியாக சென்று கூவி கூவி விற்கின்றனர்.
உப்பில்லா பண்டம் குப்பையிலே என்று கூறுவது உண்டு. அதே போன்று புளி இல்லாத சமையலும் இல்லை. தென்மாவட்ட மக்கள் சமையலுக்கு அதிகம் புளியை சேர்ப்பதுண்டு. இப்பகுதியில் நாலுமாவடி, தென்திருப்பேரை, குரங்கனி போன்ற இடங்களில் புளிந்தோப்புகள் அதிகம் உள்ளது. இங்கு விளைச்சலாகும் புளி தென்மாவட்ட பகுதிகளுக்கு மட்டும் அல்லாது வெளி மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

இப்பகுதிகளில் புளி விளைச்சல் அதிகமாக இருந்ததால் புளி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த இரு மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனையானது. தற்போது இது ரூ.50க்கு விற்கப்படுகிறது.
விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் சைக்கிள் மற்றும் டூவீலரில் புளியை கொண் டு வந்து வீதி வீதியாக சென்று கூவி கூவி விற்கின்றனர். விளைச்சல் அதிகம், புளி விளைச்சல் செய்வதற்கான செலவும் அதிகம். ஆனால் விலை மட்டும் வீழ்ச்சி அடைந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

## பால்காளான் வளர்ப்பு தொழில்முனைவோர் பயிற்சி துவக்கம்

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,00:49 IST

கருத்தை பதிவு செய்ய

வல்லநாடு : வல்லநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கிராம இளைஞர்களின் வேலை வாய்ப்புக்கான பால் காளான் வளர்ப்பு குறித்த தொழில் முனைவோர் பயிற்சி திட்டத்தின் துவக்க விழா நடந்தது.

தொழில் நுட்பத்துறை நிதியுதவியுடன் மூன்று ஆண்டுகள் செயல்படும் பால் காளான் வளர்ப்பு பயிற்சி திட்டத்தின் துவக்க விழாவில் திட்ட ஆராய்ச்சியாளர் ஜெயசேகர் வரவேற்று பேசினார். பயிர் பாதுகாப்புத்துறை தலைவர் பிள்ளை பேசினார். விழாவில் கல்லூரி முதல்வர் கணேசன் தலைமை வகித்து பேசியதாவது, பால் காளான் வளர்ப்பு பயிற்சி திட்டத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள காளான் வளர்ப்பில் ஆர்வமுள்ள இளைஞர்களை தேர்வு செய்து பயனாளி குழுக்களாக அமைத்து பயிற்சி வழங்கப்படும். கிராமப்புற இளைஞர்களை விவசாயத்தை ஒட்டிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி கொ டுப்பது அவர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்குவது இதன் நோக்கமாகும். வரக்கூடிய 5 ஆண்டுகளின் விவசாயம் மட்டுமே நிலைத்திருக்கும். விவசாயிகளே நிலைத்து நிற்க முடியும், பால் காளான் வளர்ப்பு பயிற்சி இக்கல்லூரியில் மு தன் முதலாக நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சியில் முக்கியமாக பால் காளான், திசு வளர்ப்பு முறையில் பிரித்தெடுத்து பெருக்கம் செய்தல், தரமான காளான் விதை உற்பத்தி செய்தல், பால்காளான் வளர்ப்புக்கேற்ற கட்டட அமைப்புகள் அமைத்தல், காளான் மேற்பூச்சு சாந்து தயாரித்தல், காளான் வளர்ப்பு முறைகள் அதில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் தீர்வுகள், அறுவடை தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். செயல்விளக்க திடல் ஒவ்வொரு குழுக்களின் மூலம் கிராமங்களில் அமைக்கப்படும்.

பயிற்சியாளர்களை தொழில் முனைவோராக உருவாக்கும் விதமாக விற்பனை வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்படும் என்று கூறினார். பயிர் நோயியல் துறை பேராசிரியர் எபனேசர் நன்றி கூறினார். மேலும் காளான் வளர்ப்பு குறித்து தொழில் நுட்ப ரீதியாக பயிற்சியில் பேராசிரியர் கண்ணன் காளான் வளர்ப்பு பிரச்னைகளும் அதன் தீர்வுகளையும் பற்றி எடுத்து கூறினர். இளநிலை ஆராய்ச்சியாளர் டெல்பின்மேரி செயல்விளக்க பயிற்சியளித்தார். மண்ணியல் துறை தலைவர் சுப்பிரமணியன் மற்றும் தொழில்முனைவோர் பயனாளிகள் பங்கேற்றனர்.

---

பேரிக்காய் சீசன் துவங்கியதுதர்மபுரி வாரச்சந்தையில் விற்பனைதரத்திற்கேற்ற விலை

பதிவு செய்த நேரம்:2012-07-23 09:57:52

தர்மபுரி, : தர்மபுரியில் நேற்றைய வாரச்சந்தையில் புதிய வரவாக பேரிக்காய் விற்பனை நடந்தது. மாம்பழம் சீசன் முடிந்து பேரிக்காய் சீசன் தொடங்கியுள்ளதால் மக்கள் அதிகமாக பேரிக்காய் வாங்கி சென்றனர்.

குளிர் பிரதேசங்களில் பயிரிடக் கூடிய பேரிக்காயின் சீசன் தற்போது ஆரம்பித்துள்ளது. தமிழகத்தில் கொடைக்கானல், கொடரோடு, அட்டுவம்பட்டி, பள்ளங்கி, பெருமாள்மலை உள்ளிட்ட இடங்களில் அதிகமாக பயிரிடப்படுகிறது. இதில் நாட்டுவகை, சர்க்கரை, ஊட்டி, தண்ணீர், வால்பேரி என 5 வகை பேரிக்காய்கள் உள்ளன.

ஜூலை 2வது வாரம் முதல் அக்டோபர் இரண்டாம் வாரம் வரை பேரிக்காய் சீசன் இருக்கும். நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை தாமதமானதால் பேரிக்காய் மரங்களில் பூ பூக்கும் பருவமும் தாமதமானது. இதனால் ஜூலை 2வது வாரத்தில் கிடைக்கக் கூடிய பேரிக்காய் 3வது வாரத்தில் விற்பனைக்கு வந்துள்ளது. வளர்ச்சியில்லாததால் காய்கள் வரத்து குறைந்துள்ளது. ஒரு சிப்பம் (சுமார் 40 கிலோ) கணக்கில் மொத்த வியாபாரிகளிடம் பெறப்பட்டு சில்லரை விலையில் விற்கப்படும் பேரிக்காய்கள் தற்போது ஒவ்வொரு காயும் ஒரு விலையில் விற்கப்படுகிறது. ரூ. 1 முதல் ரூ. 5 வரை விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரியில் நடந்த நேற்றைய வாரச்சந்தையில் புதிய வரவாக பேரிக்காய் வந்தது. தர்மபுரி பகுதியில் மாம்பழம் சீசன் முடிந்து பேரிக்காய் சீசன் தொடங்கியுள்ளதால் மக்கள் தற்போது அதிகமாக பேரிக்காயை அதிகமாக வாங்கி சென்றனர்.

இதுகுறித்து பேரிக்காய் வியாபாரி கூறுகையில், கிலோ கணக்கில் விற்பனை செய்தால் கட்டுப்படியாகவில்லை. எனவே ஒவ்வொரு காயுக்கும் ஒவ்வொரு விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்கிறோம்.

வரும் சில வாரங்களில் காய்களின் வரத்து அதிகரித்தால் கிலோ கணக்கில் விற்பனை செய்யப்படும். அதுவரை காய் விலைதான் விற்கப்படும் என்றார்.

போதிய அளவு மழை இல்லாததால் இடர்பாடு முக்கிய வேளாண் விளைபொருள்கள் உற்பத்தி 0.50 சதவீதம் சரிவடையும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

போதிய அளவு மழை இல்லாததால், நடப்பு 2012–13 பருவத்தில் (ஜுலை–ஜுன்) முக்கிய வேளாண் விளைபொருள்கள் உற்பத்தி 0.50 சதவீதம் சரிவடையும் என இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் மதிப்பீடு செய்துள்ளது.

மழை பற்றாக்குறை

நாடு முழுவதுமாக நடப்பு ஆண்டில் பருவமழை 22 சதவீதம் குறைவாக பெய்துள்ளது. இதனால் நாட்டின் 64 சதவீத பரப்பளவில் போதிய அளவு மழை இல்லை. மழை பற்றாக்குறையால் பஞ்சாப், அரியானா மாநிலங்களும், குஜராத், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் சில பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. மழை தாமதமானதால் பல்வேறு பயிர்களுக்கான விதைப்பு பணிகளும் தாமதமடைந்துள்ளன. இதனால் வேளாண் உற்பத்தி பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக கம்பு, சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு விளைச்சல் சரியும் என்று கருதப்படுகிறது.

ஜுன் மாதத்துடன் நிறைவடைந்த வேளாண் பருவத்தில் (2011–12) நாட்டின் உணவு தானிய உற்பத்தி ஒட்டுமொத்த அளவில் 25.74 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இதில் 10.43 கோடி டன் அரிசியும், 9.39 கோடி டன் கோதுமையும் அடங்கும். பருவமழை நிலவரங்கள் திருப்திகரமாக இருந்ததால் அவ்வாண்டில் அரிசி, கோதுமை உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்துள்ளது. நடப்பு பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 1.50 கோடி டன் குறையும் என வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையத்தின் தலைவர் அசோக்

குலாத்தி தெரிவித்துள்ளார்.

கரீப் பருவத்தின் பங்கு

முக்கிய பயிர்கள் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் (ஜூன்–அக்டோபர்) பங்களிப்பே மிகவும் அதிகமாகும். இப்பருவத்தில் தென்மேற்கு பருவமழையை நம்பியே பெரும்பாலான சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் மழை தாமதமாக தொடங்கியதால் உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி மந்தகதியில் நடைபெற்று வருகிறது. ஜூன் 29 நிலவரப்படி மொத்தம் 1.27 கோடி ஹெக்டேரில் மட்டுமே பல்வேறு பயிர்களுக்கான விதைப்பு பணிகள் நடைபெற்றுள்ளன. இந்நிலையில் மகசூலைப் பெருக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை கணிசமாக உயர்த்தியுள்ளது. 2012–13 பருவத்திற்கு நெல் கொள்முதல் விலை 15.7 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்காச்சோளம் மற்றும் கம்பு ஆகிய பயிர்களுக்கான ஆதரவு விலை 20 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்தப்பட்டுள்ளது.

நடப்பு வேளாண் பருவத்தில் சோயாபீன், பருத்தி, கடுகு போன்ற உணவு அல்லாத பயிர்களின் உற்பத்தி கணிசமாக சரிவடையும் என தெரிகிறது. ஜூன் மாத இறுதி நிலவரப்படி பருத்தி சாகுபடி பரப்பளவு 12 சதவீதம் உயர்ந்து 29.30 லட்சம் ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. என்றாலும் நடப்பு நிதி ஆண்டில் பருத்தி மகசூல் 7.8 சதவீதம் சரிந்து 3.22 கோடி பொதிகளாக (ஒரு பொதி 170 கிலோ) குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ஆகிய துறைகளில் இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வன உற்பத்தியும் குறையும் என கூறப்படுகிறது. அதே சமயம் சிறுபான்மை பயிர்கள் விளைச்சலில் 4 சதவீத வளர்ச்சி ஏற்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒட்டுமொத்த அளவில் வேளாண் உற்பத்தி 2.4 சதவீதம் அதிகரிக்கும் என தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

ஏற்றுமதி தொடர வேண்டும்

இந்நிலையில் அரிசி, கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. மத்திய வேளாண் அமைச்சக செயலாளர் ஆஷிஷ் பகுகுணா, “இன்றைய நிலையில் உணவு தானியங்கள் கையிருப்பு குறித்து எவ்வித பிரச்சினையும் இல்லை. எனவே நமது ஏற்றுமதி நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக நான் கருதவில்லை. சர்வதேச சந்தையில் இந்தியா ஒரு நிலையான பங்கேற்பாளராக இருக்க வேண்டுமானால் ஏற்றுமதியை தொடர வேண்டியது அவசியம்” என்று தெரிவித்துள்ளார்.

காட்டு யானைகளின் அட்டகாசத்தால்

# பேரிக்காய்களை முன்கூட்டியே அறுவடை செய்த விவசாயிகள்



கொலக்கம்பை அருகே ஒரு தோட்டத்தில் விளைந்த பேரிக்காய்களை தரம் பிரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள்.

கொலக்கம்பை, ஜூலை.23-

காட்டுயானைகளின் அட்டகாசத்தால் பேரிக்காய்களை முன்கூட்டியே விவசாயிகள் அறுவடை செய்கின்றனர்.

### காட்டு யானைகள் அட்டகாசம்

கொலக்கம்பை அருகே உலிக்கல், நான்சச் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பேரிக்காய் மரங்களில் தற்போது பேரிக்காய் சீசன் தொடங்கி உள்ளது. இந்த பேரிக்காய்களை உண்பதற்காக கடந்த 10 நாட்களுக்கும் மேலாக ரன்னிமேடு பகுதியில் இருந்து 5 காட்டு யானைகள் தங்களுடைய 2 குட்டிகளுடன் இப்பகுதியில் முகாமிட்டு உள்ளது. காட்டு யானைகள் பேரிக்காய் பழங்களை சாப்பிடுவதுடன் 150-க்கும் மேற்பட்ட மரங்களை வேரோடு சாய்த்து உள்ளது.

### பேரிக்காய் சீசன்

இதனால் பேரிக்காய் விவசாயத்தை நம்பி இருந்த விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி உள்ளனர். இது குறித்து பேரிக்காய் விவசாயி ஒருவர் கூறுகையில், நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன், ஜூலை மாதங்களில் பேரிக்காய் சீசன் காலம் ஆகும்.

இதனால் இங்குள்ள பேரிக்காய் மரங்களில் தற்போது சீசன் தொடங்கி உள்ளது. இதனை அறுவடை செய்து பெங்களூர், மைசூர், கேரளா உள்ளிட்ட பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம். இதனை ஜாம், மதுபானம் உள்ளிட்டவற்றிற்கு பயன்படுத்தி வருகின்றனர். தற்பொழுது இப்பகுதிகளில் உள்ள மரங்களில் பேரிக்காய்கள் அதிகளவில் மகசூல் கிடைத்துள்ளது.

கடந்த 10 நாட்களுக்கும் மேலாக மரப்பாலம், ரன்னிமேடு உள்ளிட்ட பகுதிகளில் சுற்றி திரிந்து வந்த இந்த காட்டு யானைகள் பேரிக்காய் தோப்புக்குள் புகுந்து பழங்களை சாப்பிட்டதுடன் மரங்களையும் வேரோடு சாய்த்து நாசம் செய்து உள்ளது.

இதனை வனத்துறையினர் அடர்ந்த வனப்பகுகளுக்குள் விரட்ட நடவடிக்கை மேற்கொண்டு வந்தாலும், காட்டு யானைகள் இங்கிருந்து நகர மறுத்து வருகின்றன. இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தொடர்ந்து இப்பகுதியிலேயே காட்டு யானைகள் முகாமிட்டு இருப்பதால் அறுவடைக்கு தயாரான மற்றும் தயாராகாத பழங்களை அறுவடை செய்து வருகிறோம்.

இந்த ஆண்டு காட்டு யானைகளால் எங்களுக்கு அதிகளவு நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.